[11th December 1959

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினருக்கு இந்த விஷயம் நன்ருகத் தெரியும். நாங்கள் கொடுத்த உறுதிமொழிக்கிணங்க நாங்கள் நடந்துகொண்டு வருகிறேம். வாய்க்காலில் வரும் தண்ணீரை எவ்வளவு தூரம் தடுத்து நிறுத்தி அப்பகுதி மக்களுக்கு உதவ முடியுமோ அவ்வளவு தூரம் உதவி வருகிறேம்; சில சமயம் பெரியாறு ஆயக்கட்டுத் தண்ணீரைக் கொடுத்து உதவுவது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

SRIMATHI A. S. PONNAMMAL : வைகை ஆற்றிலிருந்து திருமங்கலம் போகக்கூடிய வாய்க்காலில் 1,000 ஏக்கர் நீர்ப்பாசன வசதி வேண்டும் என்று குருவித்துரையிலிருந்து அரசாங்கத்திற்கு மகஜர் வந்திருக்கிறதா? மகஜர் வந்திருந்தால், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN எற்கெனவே, ராமநாதபுரம் ஜில்லா விவசாயிகள் எங்களுக்குத் தண்ணீர் வரவில்லை, எங்களுக்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் இப்போது நிலக்கோட்டைத் தாலுகாவிற்குத் தண்ணீர் கேட்கிறார். இதெல்லாம் பரிசிலனையில் இருக்கிறது.

'Motels'

*114 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Works be pleased to state whether this Government have considered the desirability to open 'Motels' on important Highways in the State and the decision taken on it?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that by establishing 'Motels' Government will attract more tourists to our State?- 'Motel' is a hotel.

THE HON. SRI P. KAKKAN : At present, the Chief Engineer (Highways) considers that when long distance travel is encouraged, it will be useful to try a few 'Motels' in places of halt, rest, check-up, etc.

Statues in the Marina

*117 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை பீச்சில் ஏற்படுத்தப்பட்டுள்ள காந்தி சிலைக்காகவும், "உழைப்பின் வெற்றி" சிலைக்காகவும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) இதுவரை எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?

(இ) காண்ட்ராக்டருக்கு விடப்பட்டதா அல்லது டிபார்ட்மெண்டு மூலம் கட்டப்பட்டதா?

11th December 1959]

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) Sums of Rs. 1,27,935 and Rs. 72,000, respectively, were spent for the installation of the statues of Mahatma Gandhi and Triumph of Labour in the Marina.

(c) Due to urgency, certain items of work were executed departmentally and certain works were executed by contractors.

SRI V. K. KOTHANDARAMAN : இதுபோன்ற சிலைகளை மேலும் வைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? உண்டானால், சிலைகள் எப்போது வைக்கப்படும்? நமது தேசத்தின் அரசியல் சட்டத்தை முதன் முதலாக வகுத்துக்கொடுத்த டாக்டர் அம்பேத்காரின் சிலையை வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

MR. SPEAKER : இந்தக் கேள்வி எப்படி மூலக் கேள்வியிலிருந்து எழுகிறது? இதற்கு கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI T. L. SASIVARNA THEVAR : மெரீனாவில் வைக்கப்பட்டிருக்கும் மகாத்மா காந்தி சிலை நன்றாக இல்லை, அது அவருடைய தோற்றத்தைக் காட்டவில்லை என்று தமிழகத்தில் கிளர்ச்சி நடந்ததே; அது என்னவாயிற்று?

THE HON. SRI P. KAKKAN : அதைப்பற்றி பலபேர்கள் பலவிதமாகச் சொன்னார்கள். இருந்தாலும், அரசாங்கம் இப்போதிருக்கும் சிலை அங்கேயே இருப்பது நல்லது என்று முடிவு செய்திருக்கிறது. மேலும் அச்சிலையைச் செய்தவர் ஆர்ட்ஸ் ஸ்கூல் ப்ரின்சிபாலாக பல ஆண்டு காலம் பணியாற்றியிருக்கிறார். அவர் ஸ்ரீ. சௌத்ரி என்பவர். அவர் 'லலித் கலா அகடமி'யின் டைரக்டராகவும் இருந்து பணியாற்றியிருக்கிறார். எனவே இந்த மாநிலத்தில் சிற்பக் கலையை அவரைவிட நன்கு தெரிந்தவர் வேறெவரும் இல்லை எனலாம்.

SRI K. ANBAZHAGAN : ஏழை மக்களின் பங்காளரான உத்தமர் காந்தியடிகளுக்குச் சிலை செய்வதில் 1,27,000 ரூபாய் செலவானது அதிகமான செலவு என்று அரசாங்கம் கருதவில்லையா? சென்னை சிறைச்சாலையிலுள்ள கைதிகள் உத்தமர் காந்தியடிகளின் அழகான சிலை ஒன்றை குறைந்த செலவில் செய்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறதே, எளிய விலையிலுள்ள அந்தச் சிலையை கடற்கரையில் வைக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN : இப்போது கடற்கரையில் வைக்கப்பட்டுள்ள காந்தி சிலையின் விலை ரூ. 50,000 தான். சிலையை வைப்பதற்கான கட்டிடம் கட்டுவது, அதை வைக்கும் இடத்தை அழகாக அமைப்பது ஆகியவைகளுக்குத்தான் ஜாஸ்தியான செலவு ஆனது.

MR. SPEAKER : இன்னும் நிறையக் கேள்விகள் இருக்கின்றனவே; மிகவும் அவசியமான உப கேள்விகளையே போட வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.